Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 268 உள்ளூர் - 26.09.2026 சனிக்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 268 வெளியூர் - 27.09.2026 ஞாயிற்றுக்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**சமையலறையில் தவிர்க்க வேண்டியவை!**

**சிஆர்பிஎஃப்-ல் 521 காலிப்பணியிடங்கள்!**

**மதுபான பார்களுக்கு டெண்டர்?**

**மின் பயன்பாடு கணக்கெடுக்க தனியார் ஊழியர்கள்!**

## இந்தியா - அமெரிக்கா ஒப்பந்தம்: இரு நாடுகளுக்கான உறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும்!



வாஷிங்டன், செப். 26–

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கான உறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் என அமெரிக்க வெளியுறவுத்துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தியா, அமெரிக்கா இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடுவது குறித்து இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இந்த ஒப்பந்தத்தின் முதல்கட்டமாக இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறையின் மூத்த அதிகாரி தெரிவித்ததாவது:

இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளில் ஏறக்குறைய 90 சதவீதத்திற்கும் மேல் நிறைவடைந்துவிட்டன. இறுதிக்கட்டப் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, அதுகுறித்து விரைவில் அறிவிப்பு வரும். இந்த ஒப்பந்தமானது இந்தியா – அமெரிக்கா இடையிலான உறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்லும்.

இது முன்னெப்போதும் இல்லாத ஒன்று. இந்தியத் தரப்பிலும் அமெரிக்கத் தரப்பிலும் அனைத்தும் தயாராக உள்ளன. ஆனால், நிர்வாக ரீதியில் கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் சந்தித்து வரும் சில சவால்களின் காரணமாக இந்த ஒப்பந்தம் தாமதமாகிறது என்று தெரிவித்தார்.

முன்னதாக, இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் சரியான திசையில் மிக வேகமாகச் செல்கிறது எனவும் இந்த வர்த்தக ஒப்பந்தம் விரைவில் நிறைவு பெறும் எனவும் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## அமைதிக்கு மறுப்பு... ஈரான் மீது குண்டுவீச்சுக்கு தேதி?




ஈரான், செப். 26–

ஈரான் முன்வைத்த ஏழு நாள் அமைதித் திட்டத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிராகரித்ததாகச் செய்தி வெளியாகியுள்ளது.

நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தலுக்குப் பிறகு, சூழலைப் பொறுத்து ஈரான் மீதான தாக்கு தல்கள் மீண்டும் தொடங்கலாம் எனக் கூறப்படுகிறது. எனினும், தாக்குதலுக்கான குறிப்பிட்ட தேதி தெரிவிக்கப்படவில்லை. ஹார்முஸ் ஜலசந்தியின் கட்டுப்பாடு தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையே முரண்பாடு நீடிப்பதாகக் கட்டுரை குறிப்பிடுகிறது. கப்பல் போக்குவரத்துத் தடையால் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு குறித்த கவலை ஏற்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளின் சமரச முயற்சிகள் பலனளிக்காத நிலையில், மீண்டும் போர் தீவிரமடையும் அச்சம் எழுந்துள்ளது.

இருதரப்பும் பேச்சுவார்த்தைக்குத் திரும்பி, போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே இந்தியா உள்ளிட்ட நாடுகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. அமைதிக்கான வாய்ப்புகள் குறித்த நிச்சயமின்மை தொடர்வ தால்,

அடுத்தகட்ட நடவடிக்கைகள் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளன. இந்தத் தகவல்கள் வழங்கப்பட்ட செய்தியின் அடிப்படையிலானவை; இங்கு தனியாக உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல.

## கடந்த 4 ஆண்டுகளில் 111 எம்பி., எம்எல்ஏக்கள் கட்சித் தாவல்- நாகாலாந்தில் 32 பேர்!



கடந்த 2022–ம் ஆண்டில் இருந்து நடப்பாண்டுவரை மொத்தம் 111 எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கட்சித் தாவி உள்ளனர். நாகாலாந்து மாநிலத்தில் மட்டும் 32 எம்.எல்.ஏ.க்கள் கட்சி மாறினர். கட்சி தாவியவர்களில் அதிக அளவாக நாகா மக்கள் முன்னணியில் 32 பேரும், பா.ஜனதாவில் 29 பேரும் இணைந்துள்ளனர். ஆட்சி மாற்றம் காரணமாக கட்சி தாவல்கள் நடந்துள்ள தாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தகுதிநீக்க மனுக்கள் மீது முடிவெடுக்கும் அதிகாரத்தை சபாநாயகருக்கு பதிலாக ஜனாதிபதி மற்றும் கவர்ன ருக்கு மாற்ற வேண்டும் என்று அதில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## மதுராந்தகம் தொகுதி பிரச்சனைகளை பட்டியலிட்ட முதலமைச்சர் விஜய்!



மதுராந்தகம், செப். 26–

மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூரில் நடந்த பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு முதலமைச்சர் விஜய் பேசும்போது மதுராந்தகம் தொகுதி பிரச்சினைகளை பட்டியலிட்டார். அவர் பேசியதாவது:–

பட்ஜெட் கூட்டத்தொடரில் செங்கல்பட்டு மாவட்டத்துக்கு என்று தனியாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் கல்லூரி, மாணவ, மாணவியருக்கான சமூகநீதி விடுதிகளுக்கு சொந்தக் கட்டி டங்கள், சேமிப்புக் கிடங்கு, மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு தாய்–சேய் நலக் கட்டிடம், புதிய உயர் அடுக்கு ஒருங்கிணைந்த வெளிநோயாளிகள் பிரிவு கட்டிடம், மாணவர்களுக்கான தங்கும் விடுதி, தாய் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவுகள் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் அமைக்க அறிவிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. ரூ.10 கோடியில், மதுராந்தகம் ஏரியில் உள்ள மதகு எண் 5 பாசன கால்வாயை கான்கிரீட் கால்வாயாக மாற்ற அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் சென்னை மாநகரை ஒட்டியுள்ள தொகுதியான மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. இது என் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயி களுடைய நீண்ட நாள் கோரிக்கையான பாலாற்றின் குறுக்கே உயர்மட்ட தடுப்பணை அமைக்காமலும், ஏரிகளின் மாவட்டம் என்ற சிறப்புப் பெயர் இருந்தும் கூட ஏரிகளை புனரமைக்காமலும், கால்வாய்களை தூர்வாராமலும், சீர மைக்காமலும் வஞ்சித்துள்ளனர். இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல் மணிகளை பாதுகாக்கும் வகையில் பெரிய கொள்ளளவு கொண்ட குடோன்கள் அமைக்காமலும், நிரந்தர கொள்முதல் நிலையம் ஏற்படுத்தாமலும் விவசாயி களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காமல் கடந்த ஆட்சியாளர்கள் இருந்துள்ளனர். அச்சரப்பாக்கம் சென்னைக்கு மிக அருகாமையில் இருந்தும் பெண் கல்விக்கு முக்கியத்துவம் தராமல், மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேவை இருந்தும் கடந்த ஆட்சியாளர்கள் அந்தக் கோரிக்கையை கிடப்பில் போட்டனர். அதேபோல் புக்கத்துறையில் உள்ள கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி அரசு மேல்நிலைப்பள்ளி உருவாக்கப்படவில்லை. மாவட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படவில்லை. பல்வேறு பகுதிகளில் பணிபுரியும் பெண்களுக்கும் தங்கும் விடுதி வசதி செய்து தரப்பட வில்லை. இந்த பகுதி சென்னைக்கு அருகாமையில் இருந்தும், அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டமாக இருந்தும், குடியிருப்புகள் தேவை இருந்தும், முந்தைய ஆட்சியாளர்கள் வீடற்றவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் போதுமான அளவில் கட்டித் தராமல் இருக்கும் நிலை உள்ளது. கடல் போல் காட்சி அளிக்கும் மதுராந்தகம் ஏரியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்பட வில்லை. தொகுதி மக்களின் கோரிக்கைகள் மற்றும் உங்களுடைய தேவையான அத்தியாவசிய வசதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## சென்னைக்கு வருகிறது மெட்ரோ புரட்சி!

# பூந்தமல்லி-வடபழனி விரிவாக்கம் தொடக்கம் அக்டோபர் 11-ல்!

## ஒரே மேடையில் பிரதமர் மோடி–முதல்வர் விஜய்!!



சென்னை, செப். 26–

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்தின் முக்கிய மைல்கல்லான, பூந்தமல்லி முதல் வடபழனி வரையிலான மெட்ரோ ரயில் சேவை எப்போது தொடங்கும் என்ற கேள்வி இருந்தது. இந்நிலையில் அதற்கு விடை கிடைத்துள்ளது.

பூந்தமல்லி வடபழனி மெட்ரோ விரிவாக்கத் திட்டப் பணிகள் அக்டோபர் 11ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக தொடங்க உள்ளன. சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, மேற்குப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வேகமான, பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தை வழங்கும் முக்கியத் திட்டமாக இது பார்க்கப்படுகிறது. பிரம்மாண்டமாக நடைபெற உள்ள தொடக்க விழாவில், பிரதமர் நரேந்திர மோடியும் முதல்வர் விஜயும் ஒரே மேடையில் பங்கேற்க உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் அரசியல், திரையுலகம் மற்றும் பொது மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. புதிய மெட்ரோ இணைப்பு, பூந்தமல்லி, வடபழனி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளின் வளர்ச்சிக்கு முக்கிய ஊக்கமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழில், கல்வி, மருத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு மையங்களை இணைக்கும் இந்தத் திட்டம், சென்னையின் எதிர்கால நகர்ப்புற போக்குவரத்தில் முக்கிய மைல்கல்லாக அமையும்.

மெட்ரோ சேவை விரிவடைந்தால், தினசரி பயண நேரம் குறையும்; சாலைப் போக்குவரத்து நெரிசலும் கட்டுப்படும். அக்டோபர் 11ஆம் தேதி நடைபெறும் விழா, சென்னையின் வளர்ச்சிப் பயணத்தில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் நாளாக அமையும்.

சென்னை மெட்ரோவின் இரண்டாம் கட்ட திட்டத்தில், சுமார் 118 கிலோமீட்டர் தொலைவிற்கு மூன்று வழித்தடங்களில் கடந்த மூன்று வருடங்களாகப் பணிகள் மிக தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதில், பொதுமக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த பூந்தமல்லி பணிமனை முதல் வடபழனி வரையிலான முதல் வழித்தடப் பணிகள் கடந்த ஏழு மாதங்களுக்கு முன்பே முழுமையாக நிறைவடைந்திருந்த நிலையில், தற்போது திறப்பு விழா தேதி அதிகாரப்பூர்வமாக இறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய வழித்தடத்தின் வணிக ரீதியான செயல்பாட்டிற்காக, கடந்த பிப்ரவரி மாதம் ரயில்வே பாதுகாப்பு ஆணையரிடமிருந்து சில நிபந்தனைகளுடன் கூடிய தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் பாதுகாப்பு ஆணையர் விதித்த அத்தனை நிபந்தனைகளையும் மெட்ரோ ரயில் நிறுவனம் மிகச் சரியாக நிறைவேற்றியதை அடுத்து, கடந்த மே மாதத்தில் இதற்கான இறுதி ஒப்புதல் முழுமையாகப் பெறப்பட்டது. இந்த வழித்தடத்தில் பூந்தமல்லி பைபாஸ், பூந்தமல்லி முல்லைத்தோட்டம், கரையாஞ்சாவடி, குமரஞ்சாவடி, காட்டுப்பாக்கம், ஐயப்பன்தாங்கல், தெள்ளியகரம், போரூர் பைபாஸ் மற்றும் போரூர் சந்திப்பு உள்ளிட்ட 10 ரயில் நிலையங்களில் ரயில்கள் நின்று செல்லும் வகையில் உள்கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அதே வேளையில், போரூர் சந்திப்பிலிருந்து வடபழனி இடையே அமையவுள்ள இடைப்பட்ட 4 ரயில் நிலையங்களில் தற்போதைக்கு ரயில்கள் நிற்காது என்றும், அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் அண்மையில் தெளிவுபடுத்தியுள்ளது.

பூந்தமல்லி முதல் போரூர் வழியாக வடபழனி இணைக்கும் இந்த அதிநவீன மெட்ரோ ரயில் சேவை பயன்பாட்டிற்கு வருவதன் மூலம், சென்னை நகரின் மிக முக்கியச் சாலைகளில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறையும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## தில்லி SIR-ல் 'VIP' வசதி: தேர்தல் ஆணையத்தின் புதிய நடைமுறை!



புதுடெல்லி, செப். 26–

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிக்காக (SIR) பயன்படுத்தப்படும் BLO செயலியில் 'Mark VIP' வசதி சேர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் முக்கியப் பிரமுகர்களை BLO–க்கள் தனியாகக் குறிக்க முடியும். இந்த நடைமுறை VIP வாக்காளர்களை சரிபார்ப்பு நடவடிக்கைகளில் அடையாளம் கண்டு கையாள உதவும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தில்லியில் வாக்காளர் விவரங்களில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக 33.13 லட்சம் பேருக்கு நோட்டீஸ் வழங்க அடையாளம் காணப்பட்டுள்ளது. எல். கே. அத்வானி, எஸ். ஜெய்சங்கர், அரவிந்த் கேஜரிவால் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்களுக்கும் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், VIP எனக் குறிக்கப்பட்டவர்கள் சரிபார்ப்பு அல்லது நோட்டீஸ் நடைமுறையிலிருந்து முழுமையாக விலக்கு பெறுவதில்லை என்று வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. VIP வாக்காளர்களைக் குறிக்கும் நடைமுறை முந்தைய தேர்தல் பட்டியல் திருத்தங்களிலும் இருந்ததாக தேர்தல் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## முதல்-அமைச்சரின் அதிகாரப்பூர்வ அலுவல் புகைப்படம் மாற்றம்!



சென்னை, செப். 26–

கடந்த மே மாதம் தமிழகத்தின் முதல்–அமைச்சராக பொறுப்பேற்ற முதல்–அமைச்சர் விஜய்யின் அதிகார ப்பூர்வ புகைப்படம் வெளியிடப்பட்டு, தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வைக்கப்பட்டது. ஆனால், அந்த புகைப்படத்தில் முதல்–அமைச்சரின் சிரிப்பு இயல்பாகவும் அழகாகவும் இல்லை என்று தவெக தொண்டர்கள் மற்றும் நெட்டிசன்கள் பலர் சமூக வலைதளங்களில் தொடர்ந்து தங்களது கருத்துக்களை பதிவிட்டு விமர்சித்து வந்தனர். பழைய புகைப்படத்தை மாற்றிவிட்டு, வேறொரு படத்தை வைக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுந்த வண்ணம் இருந்தன. பொதுமக்களின் இந்த விமர்சனங்களை அடுத்து, அரசு அலுவலகங்களில் வைப்பதற்கான முதல்–அமைச்சர் விஜய்யின் புத்தம் புதிய புகைப்படம் வெளியிடப்பட்டது. தலைமைச் செயலகம் முதல் கிராம ஊராட்சிகள் வரை உள்ள பல்லாயிரக்கணக்கான தமிழக அரசு அலுவலகங்கள், அரசு கட்டிடங்கள் மற்றும் விளம்பர ங்களில் இந்த புதிய புகைப்படத்தை விரைவில் மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவ ல்கள் வெளியாகி உள்ளன.

அதே நேரத்தில், மாநிலம் முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான அரசு அலுவலகங்களில் படங்களை மாற்றுவதற்கு பெரிய அளவில் அரசு நிதி செலவாகும் என்பதால், இதற்கு பதிலாக அரசு பள்ளி களின் உள்கட்டமைப்பை மேம்படுத்தலாம் என இணையத்தில் சிலர் மாற்று கருத்துக்களையும் பதிவிட்டு வருகின்றனர். மேலும், ஜோதிடரின் ஆலோசனையின் பேரில்தான் இந்த மாற்றம் செய்யப்பட்டதா என்றும் நெட்டிசன்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இருப்பினும், தங்களது நீண்ட நாள் விருப்பப்படியே முதல்–அமைச்சரின் புகைப்படம் மாற்றப்பட்டதால் உற்சாகமடைந்த தவெக தொண்டர்கள், தங்களது மகிழ்ச்சியை கொண்டாடி வருகின்றனர்.

# தலையங்கம்

**மதுரை மணி**

**சனிக்கிழமை 26.09.2026**

**விசுவாவசு தமிழ் வருடம்**

**புரட்டாசி மாதம் 09-ம் தேதி**

## பெண்ணின் கண்ணியமும் அதிகாரத்தின் மனச்சாட்சியும்!




பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஒருவர் நீதியை நாடும்போது, அவர் கேட்பது சலுகையல்ல; தனக்குரிய பாதுகாப்பையும் கண்ணியத்தையுமே. அந்தக் குரலை அதிகாரத்தால் அடக்குவதும், பணத்தால் விலைக்கு வாங்க முயல்வதும், அரசியல் செல்வாக்கால் முடக்குவதும் சமூகத்தின் மனச்சாட்சிக்கு விடப்படும் சவால்கள்.

குற்றமிழைத்தவரோடு, குற்றத்தை மறைக்க உதவுபவர்களின் செயல்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். காவல் அதிகாரி, அரசியல் பிரமுகர், இடைத்தரகர் என எவராக இருந்தாலும், ஆதாரங்களை அழித்தல், சாட்சிகளை மிரட்டுதல், புகாரைத் தடுத்தல் போன்ற செயல்களில் அவர்களுக்கு இருக்கும் தொடர்பு ஆராயப்பட வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டால், பதவியும் செல்வாக்கும் தண்டனையிலிருந்து பாதுகாக்கும் கவசங்களாக இருக்கக்கூடாது.

காவல் நிலையம் என்பது அச்சத்தில் வருபவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் இடமாக இருக்க வேண்டும். அங்கேயே புகார்தாரர் மிரட்டப்படுவாரெனில், அவர் எங்கே செல்வார்? காவல் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு எழும்போது, அவர்கள் தலையிட முடியாத சுதந்திரமான விசாரணை அவசியம். தவறிழைத்தவரைப் பாதுகாப்பதால் துறையின் கண்ணியம் உயராது; பொறுப்புக்கூறச் செய்வதால்தான் மக்களின் நம்பிக்கை வளரும்.

அரசியல் கட்சிகளும் தமது பொறுப்பிலிருந்து விலக முடியாது. தம்மைச் சேர்ந்தவர் என்பதற்காக ஒருவரைக் காப்பாற்ற முயல்வது பொதுவாழ்வின் அறத்துக்கு எதிரானது. விசாரணைக்கு ஒத்துழைப்பதும், பாதிக்கப்பட்டவருக்கு எதிரான அவதூறுகளைத் தடுப்பதும் அரசியல் நாகரிகத்தின் அடையாளங்களாக இருக்க வேண்டும்.

'சமரசம்' என்ற பெயரில் பாதிக்கப்பட்டவரின் வேதனையைப் பேரம் பேசும் இடைத்தரகர்களும் விசாரிக்கப்பட வேண்டும். ஒரு மனிதரின் கண்ணியத்துக்கு விலை நிர்ணயிக்கும் உரிமை எவருக்கும் இல்லை. அச்சுறுத்தலால் பெறப்படும் மௌனத்தைச் சம்மதமாகக் கருத முடியாது.

இந்த விவகாரத்தில் சமூகத்துக்கும் ஊடகங்களுக்கும் கடமை இருக்கிறது. பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும். அவருடைய உடை, பழக்கம், நட்பு ஆகியவற்றை ஆராய்ந்து குற்றத்துக்குக் காரணம் தேடும் கொடுமையை நிறுத்த வேண்டும். மருத்துவ உதவி, உளவியல் ஆதரவு, சட்ட உதவி, வாழ்வாதாரப் பாதுகாப்பு ஆகியவை கிடைப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

அதேவேளையில், குற்றச்சாட்டே தீர்ப்பாகிவிடக் கூடாது. ஆதாரங்களின் அடிப்படையிலான நியாயமான விசாரணையும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்குத் தற்காப்பு வாய்ப்பும் அவசியம். உறுதியான நீதி என்பது கோபத்தில் வழங்கப்படும் அவசரத் தீர்ப்பல்ல; உண்மையை நிலைநிறுத்தி, குற்றத்துக்கேற்ற தண்டனையை உறுதிசெய்வதாகும்.

பாதிக்கப்பட்டவர் தலைகுனிய வேண்டியதில்லை. குற்றமிழைத்தவரும், அதற்குத் துணைநின்றவருமே பொறுப்பேற்க வேண்டும். அதிகாரம் அநீதிக்குத் துணைபோகும்போது, அதைத் தடுத்து நிறுத்தும் வலிமை நமது அமைப்புகளுக்கு இருக்க வேண்டும்.

எளிய மனிதரின் கண்ணீரைவிட எந்தப் பதவியும் பெரியதல்ல. அவரது நீதிக்கான குரலைவிட எந்தச் செல்வாக்கும் உயர்ந்ததல்ல. இந்த உண்மையைச் செயலாக்குவதில்தான் ஓர் அறம் சார்ந்த சமூகத்தின் பெருமை அடங்கியிருக்கிறது.

## தேர்தல் ஆணையத்தை விமர்சிக்கும் ராகுல்? காங்கிரஸை நோக்கித் திரும்பும் கேள்விகள்!



புதுடெல்லி, செப். 26–

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், முன்னாள் தேர்தல் ஆணையர்கள் பின்னாளில் ஏற்ற அரசியல் மற்றும் அரசுப் பதவிகள் குறித்த விவாதம் மீண்டும் எழுந்துள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணியான எஸ்ஐஆர் நடவடிக்கை தொடர்பாக ராகுல் காந்தி விமர்சனங்களை முன்வைத்து வருகிறார். இதற்குப் பதிலளிக்கும் வகையில், காங்கிரஸ் ஆட்சிக் காலங்களில் முன்னாள் தேர்தல் ஆணையர்களுக்கு வழங்கப்பட்ட பதவிகளைச் சுட்டிக்காட்டி சமூக வலைதளங்களில் கருத்துகள் பகிரப்படுகின்றன.

**விவாதத்தில் இடம்பெறும் முன்னாள் ஆணையர்கள்**

கே.வி.கே. சுந்தரம்: 1958 முதல் 1967 வரை தலைமைத் தேர்தல் ஆணையராகப் பணியாற்றியவர். பின்னர் சட்ட ஆணையத் தலைவராகப் பொறுப்பேற்றது இந்த விவாதத்தில் சுட்டிக்காட்டப்படு கிறது.

**நாகேந்திர சிங்:** 197273 காலகட்டத்தில் தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்தவர். இந்திரா காந்தி தலைமையிலான ஆட்சியில் இவர் பணியாற்றியதும் குறிப்பிடப்படுகிறது. எனினும், இவருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் பின்னாள் பதவி அல்லது சலுகை குறித்த விவரம் பகிரப்பட்ட பட்டியலில் இல்லை.

**ஆர்.கே. திரிவேதி:** 1982 முதல் 1985 வரை தலைமைத் தேர்தல் ஆணையராகப் பணியாற்றிய பின்னர் ஆளுநராக நியமிக்கப்பட்டவர்.

**வி.எஸ். ரமாதேவி:** 1990ஆம் ஆண்டு தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்தவர். பின்னர், காங்கிரஸ் ஆதரவுடன் செயல்பட்ட ஐ.கே. குஜ்ரால் தலைமையிலான அரசின் காலத்தில் இமாச்சலப் பிரதேச ஆளுநராக நியமிக்கப்பட்டது சுட்டிக்காட்டப்படுகிறது.

**டி.என். சேஷன்:** 1990 முதல் 1996 வரை தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்தவர். 1997ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டார். பின்னர், 1999 மக்களவைத் தேர்தலில் எல்.கே. அத்வானியை எதிர்த்து காங்கிரஸ் வேட்பாளராகக் களமிறங்கினார்.

**எம்.எஸ். கில்:** 1996 முதல் 2001 வரை தலைமைத் தேர்தல் ஆணையராகப் பணியாற்றினார். பின்னர் காங்கிரஸ் சார்பில் மாநிலங்களவை உறுப்பினராகவும், மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசில் அமைச்சராகவும் பதவி வகித்தார்.

**ஜே.எம். லிங்டோ:** 2001 முதல் 2004 வரை தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்தவர். இளைஞர் காங்கிரஸ் அமைப்புத் தேர்தல்களை நடத்துவதில் இவருக்குப் பங்கு வழங்கப்பட்டதாகவும் பகிரப்படும் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் அவசியம்**

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லாவுக்கும் காங்கிரஸ் தலைமைக்கும் நெருக்கம் இருந்ததாக அரசியல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. எனினும், ஆணையத்தின் முடிவுகளை அவர் சோனியா காந்தியின் ஒப்புதலுடன் எடுத்தார் என்ற கூற்றை உறுதிப்படுத்தும் ஆதாரம் வழங்கப்படவில்லை.

அதேபோல், மற்ற இரு ஆணையர்களின் எதிர்ப்பையும் மீறித் தலைமைத் தேர்தல் ஆணையர் முடிவெடுத்ததாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்தும் குறிப்பிட்ட ஆவணங்கள் இடம்பெறவில்லை. முன்னாள் ஆணையர்கள் ஓய்வுக்குப் பிறகு அரசியல் அல்லது அரசுப் பதவிகளை ஏற்றது விவாதத்துக்குரியதாக இருக்கலாம். ஆனால், அந்த நியமனங்கள் மட்டுமே அவர்கள் தேர்தல் ஆணையத்தில் பணியாற்றியபோது பாரபட்சமாகச் செயல்பட்டதற்கான ஆதாரமாகாது. தற்போதைய குற்றச்சாட்டுகளையும் கடந்தகால நியமனங்களையும் அவற்றுக்குரிய ஆதாரங்களின் அடிப்படையில் மதிப்பிடுவது அவசியம்.

## மின் பயன்பாடு கணக்கெடுக்க தனியார் ஊழியர்கள்!



சென்னை,செப். 26–

தமிழகத்தில் வீடுகள், கடைகளில் மின் பயன்பாட்டைக் கணக்கெடுக்கும் பணியை, தனியார் ஒப்பந்த நிறுவனங்கள் வாயிலாக மேற்கொள்ள மின் வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

பணியாளர்கள் பற்றாக்குறையால் சில இடங்களில் கணக்கெடுப்பில் தாமதம் ஏற்படுவதாகவும், அதிக மின் கட்டணம் வருவதாக நுகர்வோர் புகார் தெரிவிப்பதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து, 'லிமிடெட் டெண்டர்' முறையில் ஒப்பந்த நிறுவனங்களைத் தேர்வு செய்து, ஆறு மாதங்களுக்கு இப்பணியை வழங்க மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒப்பந்தப் பணியாளர்கள் தினமும் சென்னையில் குறைந்தது 250 இணைப்புகள், பிற மாநகராட்சிகளில் 220, நகராட்சிகளில் 200, பேரூராட்சிகளில் 180, கிராமங்களில் 110, மலைப் பகுதிகளில் 80 இணைப்புகளில் கணக்கெடுக்க வேண்டும். இப்பணிகளை அடுத்த மாதம் தொடங்கி, தொடர்ந்து கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது இணைப்புக்கு ரூ.5 ஊதியத்தில் கணக்கெடுக்கும் ஓய்வுபெற்ற பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுராந்தகம் தொகுதியில் 1,152 புதிய வாக்காளர்கள்: வெற்றியை தீர்மானிக்கப் போகும் பெண்கள்..!




மதுராந்தகம், செப். 26–

மதுராந்தகம் தொகுதியை பொறுத்தமட்டில், ஆண் வாக்காளர்களை விட, பெண் வாக்காளர்களே அதிகம் என்று கூறப்படுகிறது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கும், அடுத்த மாதம் (அக்டோபர்) 6–ந்தேதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகள், வேட்பாளர்களின் பிரசாரத்தால் திருவிழா கோலம் பூண்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சீர்திருத்தத்துக்குப் பிறகு, போலி வாக்காளர் பெயர்கள், பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில், மதுராந்தகம் தொகுதியில் 2 லட்சத்து 12 ஆயிரத்து 636 பேர் வாக்களித்துள்ளனர். இதில் ஆண்கள் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 496 பேர்களும், பெண்கள் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 75 பேர்களும், மூன்றாம் பாலினத்தவர் 65 பேர்களும் வாக்கு செலுத்தி உள்ளனர்.

5 மாதங்களுக்கு பிறகு, மீண்டும் மதுராந்தகம் தொகுதியில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முறை மதுராந்தகம் தொகுதியில் 2 லட்சத்து 13 ஆயிரத்து 788 பேர்கள் வாக்களிக்க உள்ளனர். இதில் ஆண்கள் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 926 பேர்களும், பெண்கள் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 797 பேர்களும், மூன்றாம் பாலினத்தவர் 65 பேரும் அடங்குவர். கடந்த தேர்தலை விட, இந்த இடைதேர்தலில் ஆண்கள் 430 பேரும், பெண்கள் 722 பேரும் அதிகரித்து, புதிதாக 1,152 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மதுராந்தகம் தொகுதியை பொறுத்தமட்டில், ஆண் வாக்காளர்களை விட, பெண் வாக்காளர்களே அதிகம். எனவே மதுராந்தகம் தொகுதியில் வாகை சூடப்போவது யார் என்று தீர்மானிப்பவர்களாக, பெண்களே இருப்பார்கள் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## மதுபான பார்களுக்கு டெண்டர்?




சென்னை, செப். 26–

தமிழகத்தில் மதுபான விற்பனையை அரசின் டாஸ்மாக் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. மாநிலம் முழுவதும் 4,048 கடைகள் மூலம் மதுபானங்களை விற்பனை செய்யப்படுகிறது. இந்த மதுக்கடைகளை ஒட்டியுள்ள காலியிடங்களில் தின்பண்டங்கள், குளிர்பானங்கள் உள்ளிட்டவற்றை விற்பனை செய்வதற்காக தனியாருக்கு 'பார்' எனப்படும் மதுக்கூட உரிமம் வழங்கப்படுகிறது.கடந்த 2024–ம் ஆண்டு ஜனவரி மாதம் வழங்கப்பட்ட 2 ஆண்டுகளுக்கான மதுக்கூட ஒப்பந்தம், இந்த ஆண்டு ஜனவரியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து, சட்டசபை தேர்தல் காரணமாக மதுக்கூடங்களுக்கான ஒப்பந்த காலம் முதலில் ஜூன் 30–ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. பின்னர், அக்டோபர் 31–ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.இதைத்தொடர்ந்து, புதிதாக மதுக்கூடங்களுக்கான ஒப்பந்தம் வழங்குவதற்காக அடுத்த மாதம் முதல் வாரத்தில் டெண்டர் கோரப்பட உள்ளது.

இதுகுறித்து டாஸ்மாக் அதிகாரி ஒருவர் கூறியதாவது:– இதுவரை மதுக்கூடங்களுக்கான டெண்டரில், சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளரிடம் இருந்து தடையில்லா சான்று பெறுவது கட்டாயம் என்ற நிபந்தனை இருந்து வந்தது. பல இடங்களில் கட்டட உரிமையாளர்களே மதுக்கூடங்களை நடத்தி வருவதால், புதியவர்களுக்கு தடையில்லா சான்று கிடைப்பதில் சிக்கல் இருந்து வந்தது. இதன் காரணமாக, கடந்த 20 ஆண்டுகளாக குறிப்பிட்ட சில நபர்களே மதுக்கூடங்களை நடத்தி வருவதாக தெரிகிறது. இதனால், இந்த முறை விதிகளில் தளர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை கடந்த ஜூலை மாதம் வெளியிடப்பட்டது. அதன்படி, இனிமேல் மதுக்கடையை ஒட்டியுள்ள இடத்திலோ அல்லது மதுக்கடையில் இருந்து 100 மீட்டர் தொலைவுக்குள் உள்ள இடத்திலோ மதுக்கூடம் அமை க்கலாம். இதன் மூலம் புதிய வர்களுக்கும் மதுக்கூடங்களுக்கான ஒப்பந்தம் கிடைக்கும்.

இந்த மாற்றத்தை விரும்பாத சிலர், மதுக்கூடங்களுக்கான டெண்டர் வெளியாவதற்கு முட்டுக்கட்டை ஏற்படுத்த திட்டமிட்டு வருவதாக தகவல் கிடைத்துள்ளது. இதுதொடர்பாக அவர்களின் விவரங்கள் ரகசியமாக சேகரிக்கப்பட்டு வருகின்றன.டெண்டர் அறிவிப்பு வெளியான பிறகு வழக்கு தொடர்வது உள்ளிட்ட நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டால், சட்டப்படி அவற்றை விரைவாக எதிர்கொண்டு, எந்தவித பிரச்சினையும் இல்லாமல் மதுக்கூடங்களுக்கான ஒப்பந்தங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

## ராமநாதபுரம் சி.எஸ்.ஐ கல்வியியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்ட தின விழா!



இராமநாதபுரம் செப் 26–

ராமநாதபுரம் சி. எஸ். ஐ கல்வியியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்ட தினம் கொண்டாடப்பட்டது. கல்லூரியின் தாளாளர் தேவ மனோகர் மார்ட்டின் தலைமை தாங்கினார். கல்லூரியின் முதல்வர் டாக்டர். ஆனந்த் நாட்டு நலப்பணி திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றும் தன்னலம் கருதாமல் செய்யப்படும் சேவைகள் குறித்து கருத்துரை வழங்கினார்.

கல்லூரியின் நாட்டு பணித்திட்ட மாணவர்களுக்கு கல்லூரியின் யோகா பயிற்றுநர் கற்பகவள்ளி அவர்களால் யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.

பின்பு, கல்லூரி வளாகத்தை தூய்மை செய்து, கல்லூரி முதல்வர், உதவி பேராசிரியர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களால் மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்வுகள் அனைத்தும் கல்லூரியின் நாட்டு நல பணித்திட்ட அலுவலர் சுகந்தி ஜெனிபா அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.



## சமையலறையில் தவிர்க்க வேண்டியவை!



அன்னபூரணி அருள் நிறைந்த இடமாகச் சமையலறை போற்றப்படுகிறது. அதைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் பராமரிப்பது சிறப்பு. வாஸ்து நம்பிக்கைப்படி, சமையலறையில் தவிர்க்க வேண்டிய பொருட்கள் என்னென்ன?

**1. உடைந்த பாத்திரங்கள்**

விரிசல் விழுந்த கோப்பைகள், உடைந்த பாத்திரங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். இவற்றை வைத்திருப்பது இல்லத்தின் செழிப்புக்கு உகந்ததல்ல என்பது வாஸ்து நம்பிக்கை.

**2. மருந்து, மாத்திரைகள்**

சமையலறை மேடையில் மருந்துகளை வைப்பதை வாஸ்து மரபு தவிர்க்கச் சொல்கிறது. மருந்துகளின் சேமிப்பு வழிமுறைக்கு ஏற்ப அவற்றைத் தனியே பாதுகாப்பாக வைக்கலாம்.

**3. அழுக்குத் துணி, துடைப்பம்**

உணவு தயாரிக்கும் மேடையில் அழுக்குத் துணிகள், துடைப்பம், சுத்தம் செய்யும் பிரஷ் ஆகியவற்றை வைக்க வேண்டாம். சமையலறையின் தூய்மைக்குத் தனிக் கவனம் அவசியம்.

**4. அடுப்பைப் பிரதிபலிக்கும் கண்ணாடி**

அடுப்பின் நெருப்பு கண்ணாடியில் பிரதிபலிப்பது வீட்டின் அமைதிக்கு உகந்ததல்ல என வாஸ்து நம்பிக்கைகள் கூறுகின்றன.

**5. காலியான தானிய டப்பாக்கள்**

அரிசி, தானியங்கள், கல் உப்பு போன்றவை முற்றிலும் தீரும் முன்பே வாங்கி வைப்பது வளத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. தேவையற்ற காலி டப்பாக்களை மேடையில் குவிக்காமல் ஒழுங்குபடுத்தலாம்.

இவை பாரம்பரிய வாஸ்து நம்பிக்கைகள்; இவற்றால் செல்வம் அல்லது உடல்நலம் பாதிக்கப்படும் என்பதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை.




தேனி மாவட்ட ஆட்சியர் அரங்கத்தில் தேனி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் இணைந்து நடத்திய தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தெரிவுசெய்யப்பட்ட 22 நபர்களுக்கு மாவட்ட ஆட்சி தலைவர் வைத்திநாதன் பணிநியமன ஆனைகளை வழங்கினார்.



தேனி மாவட்டம் சின்னமனூரில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் வளைகாப்பு சீர்வரிசைப்பொருட்களை வழங்கினார். உடன் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா உள்ளார்.

## எகிறப்போகும் தங்கம் விலை... சவரன் ரூ.2 லட்சம்?



சென்னை: செப். 26–

வரும் 2027–ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் தங்கத்தின் விலை ஒரு சவரன் ரூ.2 லட்சத்தை எட்டும் என்று தமிழ்நாடு தங்கம் மற்றும் வைர வியாபாரிகள் சங்க தலைவர் ஜெயந்திலால் சலானி தெரிவித்துள்ளார். சென்னையில் 3 நாட்கள் நடைபெறும் நகை வர்த்தக கண்காட்சியில் அவர் பேசியதாவது:

இந்த கண்காட்சியில் தென்னிந்தியாவைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் நகைக்கடை வியாபாரிகள் பார்வையிட்டு, நகைகளை கொள்முதல் செய்ய உள்ளனர். இதன் மூலம் சுமார் ரூ.10 ஆயிரம் கோடி அளவுக்கு வர்த்தகம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது 18, 14 மற்றும் 9 கேரட் தங்க நகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் இந்த நகைகளை வாங்கி பயன்பெறலாம். இவற்றின் சந்தை மதிப்பு குறைவதில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## இன்றைய கார்ட்டூன்




## தி.மு.க.,வுக்கு டிபாசிட் போய்விடக்கூடாது: ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, செப். 26–

‘சென்னை ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில், தி.மு.க., ‘டிபாசிட்’ இழந்தது போல மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் ஏற்பட்டு விடக்கூடாது’ என, கட்சியினரை, தி.மு.க., தலைவர் ஸ்டாலின் எச்சரித்து ள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் குறித்து, தி.மு.க., சார்பில் களமிறக்கப்பட்டு உள்ள தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், மாவட்ட செயலர்களுடன், ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

அவர்களிடம் ஸ்டாலின் கூறியுள்ள தாவது: கடந்த 2017ல், சென்னை ஆர். கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில், தி.மு.க., வேட்பாளர் மருது கணேஷ், 24,651 ஓட்டுகள் மட்டுமே பெற்று, ‘டிபாசிட்’ இழந்தார். ஆனால், அ.தி.மு.க., ‘டிபாசிட்’டை தக்க வைத்தது.



தி.மு.க., நிர்வாகிகள் சிலர் மீது நடவடிக்கை எடுத்த பின், அடுத்த பொது த்தேர்தலில், ஆர்.கே.நகர் தொகுதியில் தி.மு.க ., வெற்றி பெற்றது. ஆர். கே.நகர் இடை த்தேர்தலில் நடை பெற்ற தவறு மீண்டும் நடந்து விடக்கூடாது. இவ்வாறு கூறியுள்ளார்.

**கனிமொழி, உதயநிதி பிரசாரம்**

தி.மு.க., வெளியிட்டுள்ள அறிக்கை: வரும் 30ம் தேதி, மதுராந்தகம் தொகுதி தி.மு.க., வேட்பாளர் பரந்தாமனை ஆதரித்து, கருங்குழி, கடப்பேரி, சரவம்பாக்கம், பெரும்பேர் கண்டிகை, கீழ் அத்திவாக்கம் கூட்டு ச்சாலை என, ஐந்து இடங்க ளில் தி.மு.க., துணைப் பொதுச்செயலர் கனிமொழி பிரசாரம் செய்கிறார். நாளை மதுரா ந்தகம், அச்சி றுப்பாக்கம், ஒரத்தி, கருங்குழி, மாம ண்டூர் ஆகிய இடங்களில் இளை ஞரணி செயலர் உதயநிதி, திறந்த வேனில் சென்று பிரசாரம் செய்ய உள்ளார். நாளை மறுதினம், நெல்வாய் கூட்டு சாலை, எண்டத்துார், எலப்பாக்கம் ஆகிய இடங்களில் தே.மு.தி.க., பொதுச்செயலர் பிரேமலதா பிரசாரம் மேற்கொள்கிறார். இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இன்றைக்கு அதிமுகவுக்கு வந்த நிலைமை 2 ஆண்டில் திமுகவுக்கு வரும்..!- அமைச்சர் நிர்மல்குமார்!

மதுரை, செப். 26–

மதுரையில் அமைச்சர் நிர்மல்கு மார் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.



அப்போது அவர் கூறியதாவது:–

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தொடங்கி வைக்க 28ம் தேதி மதுரை வரும் முதலமைச்சர் விஜய், காந்தி மியூசியத்தை திறந்து வைக்கிறார். வீரமணியை காப்பாற்றும் வேலையில் இப்போதும் திமுக ஈடுபடுகிறது. 2024ம் ஆண்டில் புகார் கிடைத்தும் வீரமணி மீது வழக்குப்பதிவு செய்யாதது ஏன்? திமுக ஆட்சி காலத்தில் மூடி மறைக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

வீடியோ ஷேடோவாக இருந்தது, போதிய ஆதாரம் இல்லாததால் வழக்கை மூடியதாக ரகுபதி கூறுகிறார்.

வீரமணி வழக்கில் திமுக ஓவர் ரியாக்ட் செய்கிறது. திமுக ஆட்சியின்போது ஜெம் வீரமணி வழக்கில் எஸ்ஐடி அமைக்காதது ஏன்?

ஜெம் வீரமணி விவகாரத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கட்டப்பஞ்சா யத்து நடந்துள்ளது.

வீரமணி வழக்கு நடந்த நேரத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் என்ன செய்து கொண்டிருந்தார். மு.க.ஸ்டாலினுக்கு தெரிந்தும் அவர் அமைதியாக இருந்தாரா? வீரமணி வழக்கில் போலீசார் சம்பந்தப்பட்டபோது, துறை அமைச்சராக இருந்த ஸ்டாலின் என்ன செய்தார்?

வீரமணி குப்பனோ சுப்பனோ அல்ல, பாலியல் வன்கொடுமை குறித்து உளவுத்துறை சொல்லியும் நடவடிக்கை எடுக்காதது ஏன்? வழக்கு தொடர்பாக பல பேர் பேரம் பேசி வீரமணியிடம் பணம் பறித்ததாக தொடர்ந்து செய்திகள் வெளி வருகின்றன.

வீரமணி வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். ஒருவரும் தப்பிக்க முடியாது. வீரமணி வழக்கில் மீது யார் மீது ஆதாரம் உள்ளதோ. யார் பணம் பறித்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பத்திரகை செய்தி அடிப்படையில் பெ.சண்முகம் பேசியுள்ளார். விளக்கம் அளிப்பதாக கூறியுள்ளார். அதிமுக எம்எல்ஏக்கள் அக்கட்சியிலிருந்து எதற்காக வெளியே வந்தனர் என அனைவரும் அறிந்துள்ளனர். இபிஎஸ் சுயநலம் காரணமாக அதிமுகவில் இருந்து தலைவர்கள் வெளியேறு கிறார்கள். தற்போது உள்ளது எடப்பாடியின் அதிமுக. எம்ஜிஆர், ஜெயலலிதா வளர்த்த அதிமுக இல்லை.

எடப்பாடியின் சொத்துகளை காப்பாற்றுவதற்காகவே அவருடன் இன்னும் சிலர் ஒட்டிக்கொண்டுள்ளனர். இன்றைக்கு அதிமுகவுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை இன்னும் 2 ஆண்டுகளில் திமுகவுக்கு ஏற்படும்.

அரசியல் எதிர்காலமே இல்லாததால் திமுக, அதிமுகவில் யாரும் பயணிக்க விரும்பவில்லை. அண்ணா தொடங்கி கலைஞர் வளர்த்த திமுக தற்போது ஸ்டாலினையும் உதயநிதியையும் நம்ப முடியாத நிலையில் உள்ளது.

தமிழகத்திற்கு தேவைப்படும் நேரத்தில் முதல் ஆளாக பாஜகவை தவெக எதிர்க்கும். பாஜகவை கொள்கை எதிரியாக கூறி கட்சி தொடங்கிய தவெக தற்போது வரை அதே நிலைப்பாட்டில் உள்ளது.

தவெகவினர் யாருமே எந்த பவர் சென்டரும் வைத்திருக்கவில்லை, ஈகோவில் தான் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் பேசுகிறார். பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் இன்னும் எத்தனை நாட்கள் அப்பா, தாத்தா என பேசிக்கொண்டிருப்பார் என தெரியவில்லை. திமுக ஆட்சியில் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டபோதே அதற்கு சரிவரமாட்டார் என நீக்கப்பட்டவர் பழனிவேல் தியாகராஜன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் புதிய சாதனை!

சென்னை செப். 26–

முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு சாதனை படைத்தது மத்திய தொழில், உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு துறை தரவுப்படி தெரிய வந்துள்ளது.



2026–27–ம் நிதியாண்டின் முதல் காலாண்டில் நாட்டிலேயே அதிக அன்னிய முதலீட்டை ஈர்த்த மாநிலமாக தமிழ்நாடு புதிய சாதனை படைத்து ள்ளது. ஏப்ரல் முதல் ஜூன் வரை ரூ.50,000 கோடி (5.95 பில்லியன் அமெரிக்க டாலர்) அன்னிய நேரடி முதலீட்டை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு சாதனை படைத்தது மத்திய தொழில், உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு துறை தரவுப்படி தெரிய வந்துள்ளது.

தமிழ்நாடு 2025–26–ம் நிதியாண்டில் 2.7 பில்லியன் டாலர் அன்னிய முதலீடு ஈர்ப்பானது நடப்பு நிதியாண்டில் இருமடங்காக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரா 4.22 பில்லியன் டாலர், டெல்லி 2.67 பில்லியன் டாலர், கர்நாடகா 2.11 பில்லியன் டாலர், குஜராத் 1.30 பில்லியன் டாலர் அன்னிய முதலீடுகளை ஈர்த்துள்ளன.

## இந்தியாவுக்கு 3-வது தங்கம்: இறுதிப் போட்டியில் மகளிர் கபடி அணி த்ரில் வெற்றி!

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி தங்கம் வென்றது அசத்தியுள்ளது. இத்துடன் இந்தியாவுக்கு மூன்றாவது தங்கப் பதக்கம் இந்த ஆசிய விளையாட்டில் கிடைத்துள்ளது.




ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2026 ஜப்பானின் அய்ச்சி – நகோயா பகுதியில் செப். 19 ஆம் தேதி தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மகளிர் இந்திய அணி இறுதிப் போட்டியில் ஈரான் மகளிரணி உடன் மோதியது. இந்தப் போட்டியில் இந்திய அணி 37–34 என்ற புள்ளிகளில் வென்றது. வெறுமனே 4 புள்ளிகள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின் முதல் பாதியில் இந்திய அணி 22–16 என்ற புள்ளிகள் பெற்றன. இரண்டாம் பாதியில் ஈரான் அணி மிகுந்த சவாலை அளித்தது.

இதுவரை ஐந்து முறை இறுதிப் போ ட்டிக்குச் சென்றுள்ள இந்திய மகளிர் கபடி அணி தொடர்ச்சியாக நான்காவது முறையாக தங்கம் வென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஆடவர் அணியும் இறுதிப் போட்டியில் விளையாடுகிறது.

இதுவரை, 2026 ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய அணி 3 தங்கம், 11 வெள்ளி, 13 வெண்கலத்துடன் 27 பதக்கங்களை வென்றுள்ளது.

## கோடை காலத்தில் தண்ணீர் தட்டுப்பாடு?- வானிலை ஆய்வாளர்கள்!

சென்னை, செப். 26–

அடுத்த 3 மாதங்களில் சேமிக்கும் ஒவ்வொரு சொட்டு மழைநீரும், அடுத்தாண்டு பிப்ரவரி–மே மாதங்களில் வரவிருக்கும் சூப்பர் எல் நினோ காலகட்டத்தை சமாளிக்க உதவியாக இருக்கும். எனவே மழை பெய்யும்போது தண்ணீரை சேமித்து வைத்து க்கொள்ள வேண்டும். மேலும் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்பு களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும். மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் தற்போது கனமழை பெய்து வருகிறது. இதன்காரணமாக சிறுவாணியில் 7 மி.மீ., அடிவாரம் பகுதியில் 10 மி.மீ. வீதம் மழை அளவு பதிவாகி உள்ளது. இந்த அணையில் இருந்து குடிநீர் தேவைக்கு 6 கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டது.



அணையில் நேற்றைய நிலவரப்படி 30.57 அடிக்கு நீர் இருப்பு காணப்பட்டது. இருந்தபோதிலும் கோவை மாவட்டத்தின் இதர பகுதிகளில் பெரிய அளவில் மழை இல்லை. இந்த நிலையில் வருகிற 28–ந்தேதிக்கு பிறகு வடகிழக்கு பருவமழைக்கு முந்தைய இடி மழைக்காலம் தொடங்கும் என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்து உள்ளனர். இதுகுறித்து மேலும் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:–

பாலக்காட்டு கணவாய் மேற்கு எல்லை பகுதிகளில் ஆங்காங்கே சாரல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கொங்கு மண்டலத்தின் பல பகுதிகளில் படிப்படியாக வேகம் பிடித்து, அக்டோபர் முதல் வாரத்தில் பரவலாக மழை பெய்யக்கூடும்.

அடுத்த 3 மாதங்களில் சேமிக்கும் ஒவ்வொரு சொட்டு மழைநீரும், அடுத்தாண்டு பிப்ரவரி–மே மாதங்களில் வரவிருக்கும் சூப்பர் எல் நினோ காலகட்டத்தை சமாளிக்க உதவியாக இருக்கும். எனவே மழை பெய்யும்போது தண்ணீரை சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகளில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

கோவை மாவட்டம் கோடைக்காலத்தில் கண்டிப்பாக தண்ணீர் தட்டுப்பாட்டை சந்திக்க வேண்டி இருக்கும். எனவே மழைநீரை நிலத்தடி நீர்த்தொட்டிகளில் சேகரித்து வைப்பது அவசியம். இதுதொடர்பாக கோவை மாநகராட்சி முன்கூட்டியே மழைநீர் சேகரிப்பை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

## காஞ்சி காமாட்சியம்மன் கோயில் நடை அடைப்பு!

காஞ்சிபுரம், செப். 26–

காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயம் நடை சாத்தப்படும் என முறையாக ஊடகங்கள் வாயிலாக அறிவிக்காததால் விடுமுறை தினமான இன்று ஏராளமான பக்தர்கள் கோயிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்ய முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர்.



கோயில் நகரம் என கூறப்படும் காஞ்சிபுரம் நகரில் உள்ள பிரசித்தி பெற்ற பல கோயில்கள் அமைந்துள்ளன. குறிப்பாக காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் திருக்கோயில் சக்தி பீடங்களில் ஒன்றான காஞ்சி காமாட்சியம்மன் கோயில், பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றான ஏகாம்பரநாதர் கோயில்கள் குறிப்பிடத்தக்கன.

அவ்வகையில் சக்தி பீடங்களில் ஒன்றான காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தில் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான உள்ளூர், வெளியூர், வெளி மாநில என பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் தரிசனம் மேற்கொள்வது வழக்கம்.

இந்த நிலையில் சனிக்கிழமையான இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடை சாற்றப்பட்டு பக்தர்கள் தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இன்று ஆதிசங்கரர் உற்சவ விஸ்வரூபம் யாத்திரை விழாவுக்காக காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் அருகே உள்ள உபநிஷத் மடத்திற்கு ஆதிசங்கர் செல்வதால் பக்தர்கள் தரிசனம் கிடையாது என அறிவிப்பு பலகை திருக்கோயில் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

தரிசனம் ரத்து குறித்து முன்னரே திருக்கோயில் நிர்வாகம் ஊடகங்கள், பத்திரிகைகளுக்கு முறையாக அறிவிப்பு அளிக்காததால் இந்த தகவல் தெரியாமல் விடுமுறை நாளான சனிக்கிழமை இன்று பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் வருகை தந்தனர்.

ஆதிசங்கரர் திருக்கோயிலில் இருந்து புறப்பட்ட உடன் திருக்கோயில் உள்ளே இருந்த பக்தர்களுக்கு மட்டும் தரிசனம் அனுமதிக்கப்பட்டு, உள்ளே செல்லும் பக்தர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

முன்கூட்டியே தகவல் தெரிவித்து இருந்தால் திருக்கோயில் தரிசன நிகழ்ச்சி மறுநாள் வைத்துக் கொண்டிருக்கலாம் என பக்தர்கள் வருத்தத்துடன் சென்றனர்.

## ஒரு மாதத்தைக் கடந்த நேபாளப் பெருவெள்ளம்: 85 தமிழர்களின் நிலை?

புதுடெல்லி, செப். 26–

நேபாளப் பெரு வெள்ளம் ஏற்பட்ட போது, அங்கிருந்த தமிழகத்தைச் சேர்ந்த 85 பேரின் நிலை என்னவானது என்பது ஒருமாத காலம் ஆன நிலையிலும் இன்னமும் கண்டுபிடிக்கப்படாமல் உள்ளது. இதனால், அவர்களது குடும்பத்தினர் சொல்ல முடியாத துயரத்தில் உள்ள னர். திபெத்–நேபாள எல்லையில் கடந்த ஆக. 26–ஆம் தேதி ஏற்பட்ட பெரும் பனிப்பாறை சரிவால் போடே கோஷி ஆற்றல் பெருவெள்ளம் சீறிப்பாய்ந்து, நேபாளத்தின் மத்திய–வடக்கு மாவட்டங்களில் பேரழிவை ஏற்படுத்தியது. கரையோர கிராமங்கள், சிறு நகரங்கள் இருந்த இடம் தெரியாமல் போயின. நேபாளத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையிலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த 85 பக்தர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. உடல்களும் மீட்கப்படவில்லை, மீட்கப்பட்ட உடல்க ளிலும் அடையாளம் காணப்படாமல் இருப்பது, பெருந்துயரத்துடனும் மிகுந்த வேதனையுடனும் நாள்களைக் கழிக்கும் நிலைக்கு அவர்களது குடும்பத்தினர் தள்ளப்பட்டுள்ளனர்.



தங்களது உறவுகள் குறித்த எந்த வொரு தகவலும் கிடைக்காததால், காணாமல் போன தமிழர்களின் குடும்பத்தினர், கடந்த 15ஆம் தேதி வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் த. தென்னரசுவைச் சந்தித்து கோரிக்கை வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து செப்டம்பர் 21–ஆம் தேதி சிங்கப்பெருமாள் கோவிலில் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். தங்கள் அன்புக்குரியவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது குறித்த உறுதியான தகவல் ஏதுமில்லாத நிலையில், தாங்கள் பெரும்பாலும் தனித்து நின்று போராட வேண்டிய சூழலில் விடப்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். சிலர் நேபாளத்திற்குச் சென்று தேடுதல் பணிகளில் உதவத் தயாராக இருப்பதாகவும் கூறுகிறார்கள்.

நேபாளத்திற்கு 49 பேர் கொண்ட குழுவினரை அழைத்துச் சென்ற மகாதேவ் கைலாஷ் யாத்ரா’நிறுவனத்தின் உரிமையாளரும், குரோம்பேட்டையைச் சேர்ந்தவருமான என். மரவேல் (55), வழக்கம் போலவே, ஊடகங்களில், நேபாள வெள்ளச் சம்பவம் குறித்த கவனம் குறைந்துவிட்டது, ஒருவேளை நாங்கள் பழைய செய்தியாகிவிட்டோம் போல. சென்னை மற்றும் தமிழ்நாடு முழுவதும் தினமும் எவ்வளவோ விஷயங்கள் நடக்கின்றன; அதனால் எங்கள் பிரச்னையைப் பற்றி இனி யாரும் பேச விரும்பமாட்டார்கள்’’ என்று மிகக் கனத்த வார்த்தைகளால் துயரத்தை வெளிப்படுத்தினார்.

சென்னையிலிருந்து 48 பேர் கொண்ட குழுவை வழிநடத்திச் சென்ற மரவேலின் மகன் என். சத்ய நாராயணனும் (28) காணாமல் போனவர்களில் ஒருவர்.

இந்தக் குழு இமயமலைப் பயணத்தை முடித்துவிட்டு, சீன குடியுரிமை பிரிவு அலுவலக வளாகத்தில் இருந்தபோது தான் அங்கு மிகப்பெரிய வெள்ளம் ஆர்ப்பரித்து வந்து, வெறும் கட்டடத்தை செங்கல் கட்டுமானமாக விட்டுச் சென்றிருந்தது.

தனக்கு ஆன்மீகத்தில் நம்பிக்கை இருப்பதாகவும், மகன் சத்யநாராயணன் ஜாதகப்படி, அவர் உயிருடன்தான் இருப்பார், தொடர்புகொள்ள முடியாத இடத்தில் சிக்கியிருக்கலாம் என்று நம்புகிறோம். அவர் திரும்பி வருவார் என்று எதிர்பார்த்து அவரது ஒன்பது மாதக் குழந்தை காத்திருக்கிறது என்கிறார் கண்ணீரோடு. நேபாளம் சென்று காணாமல் போனவர்களின் குடும்பத்தினர், மரபணு சோதனைக்காக ரத்த மாதிரிகளையும் கொடுத்துள்ளனர். ஆனால், இதுவரை ஒரு உடல்கூட அடையாளம் காணப்படவில்லை.

தங்களது ரத்த மாதிரிகள் நோபளம் சென்றடைந்துவிட்டது என்ற தகவல் மட்டுமே கிடைக்கப்பெற்றது. அதன்பிறகு வேறெந்த தகவலும் கிடைக்கவில்லை. யாரையும் குறைகூட விரும்பவில்லை. தகவலுக்காக காத்திருக்கிறோம். ஆனால் இன்னும் எத்தனை நாள்கள் காத்திருக்க வேண்டும் என்று சொன்னால் போதும் என்கிறார்கள் பலரது குடும்பத்தினர்.

ஒரு 17 வயது சிறுவனின் பெற்றோர், நேபாளம் சென்று காணாமல் போன நிலையில், அவனை கவனித்துக் கொள்ளவும், குடும்ப பொறுப்புகளை ஏற்கவும் யாரும் முன்வரவில்லை. இப்போது அவனது படிப்பு மட்டுமல்ல, வாழ்க்கையே கேள்விக்குறியாகி நிற்கிறது. அவன் வீட்டு மின்சார கட்டணத்தைக் கூட யாரும் இல்லை என்கிறார்கள் அக்கம் பக்கத்தினர்.

தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலையைச் சேர்ந்த ஆர். மணிகண்டன் (34) என்பவர் பேசுகையில், எங்களது பெற்றோர் காணாமல் போயிருக்கிறார்கள். எங்களுக்கு இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. நாங்கள் முழுமை யாகத் தமிழக அரசையே நம்பியுள்ளோம் என்கிறார். தனது தாய் ஆர். சிவயோகம் (65) நேபாளம் சென்று காணாமல் போயிருக்கிறார். ஆனால், தற்போது நேபாளத்தில் தேடுதல் பணிகள் நிறுத்த ப்பட்டுவிட்டன என்று அறிகிறோம். தமிழ் தெரிந்தவர்கள் உதவியோடு அங்கிருக்கும் மருத்துவமனைகளில் ஆய்வு செய்ய வலியுறுத்தியிருக்கிறோம் என்கிறார் அவரது மகள் அனிதா.

மயிலாடுதுறையைச் சேர்ந்த உதயகுமார், தன்னுடைய மனைவி ராஜேஸ்வரி (62) இல்லாதது வீட்டை மட்டுமல்ல, என் வாழ்க்கையையும் வெறுமையாக்கியுள்ளது. நான் தினமும் அவருக்காகப் பிரார்த்தனை செய்து வருகிறேன். இதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்? என்கிறார்.

ஒரு மாதம் கடந்த நிலையில், தங்களது உறவுகள் நிலை என்ன என்று தெரியாமல், தமிழகத்தில் தவிக்கும் குடும்பத்தினருக்கு தமிழக அரசு உதவி செய்ய வேண்டும், பாதிக்கப்பட்ட சிறுவனின் கல்வி மற்றும் வாழ்வாதாரத்துக்கு உதவ வேண்டும் என்பதே வலுவான கோரிக்கையாக உள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020